1974 மார்ச் 6]

Coconut plantations

* 307 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware of the destruction caused to the coconut groves by the black-headed caterpillars in Coimbatore district and particularly in Bhavani taluk; and

(*b*) if so, the action taken thereon by the Government?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனுர்: (அ) ஆம்

(இ) பாராசைட்ஸ் என்ற ஒட்டுண்ணி, அதாவது, பூச்சிகளைக் கொல்லும் பூச்சிகளைப் பயன்படுத்தி கம்பளிப் பூச்சி ஒழிக்கப் பட்டது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே இந்த ஒட்டுண்ணி தயாரிக்கும் இடம் பொள்ளாச்சியில் தான் இருக்கிறது. வேறு இடங்களில் இல்லை. ஆகவே, இதைப் பரவலாக்க வழிவகை செய்யப்படுமா ? கடந்த சில ஆண்டுகளாக கோவை மாவட்டத்தில் இந்த நோய் பரவி வருகிறது. ஒவ்வொரு முறையும் நோய் ஏற்படும்போது, நாங்கள் பொள்ளாச்சிக்குத் தான் செல்ல வேண்டியிருக்கிறது. அது சௌகரியமாகக் கிடைக்க வில்லை. ஆகவே, பவானியைப் பொறுத்த வரையில், கோபியில் அம்மாதிரி Parasites Breeding Station ஏற்படுத்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: இது ஆராய்ந்து முடிவு செய்யப்பட வேண்டியது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அகில இந்திய அளவிலே தேங்காய் விலை உயர்ந்து இருப்பதாலும், தேங்காய் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாலும் கேரளத்தோடு தமிழ்நாடு தான் இந்த மார்க்கெட்டிலே போட்டியிடுகிறது என்ற காரணத்தினுல் கேரளத்திலே இருக்கிற தேங்காய் உற்பத்தியாளர்கள் தமிழ்நாட்டிலே இந்த நோயைப் பரப்பி விடுவதாகச் சொல்லப்படுகிறதே, அப்படியென்ருல் அதன்மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்கு ஆதாரம் அரசாங்கத்திடம் இல்லை.